கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

அசல் வழக்கு எண். 51/2017

வாதியின்/பிரதிவாதியின் ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி)திரு,P,பிரபு,இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர் ராதாகிருஷ்ணன்(வா.சா.1) | சாதி |
| த/பெ.க/பெ. | மதம் |
| கிராமம் | தொழில் |
| தாலுகா | வயது |

---

10.08.2022

முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் 3ம் வாதியாவேன். வாதி தரப்பு முதல் சாட்சியாவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து அதில் கையொப்பம் செய்தேன். அதிலுள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சான்றாவணங்களை வாதிகள் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். 09.02.1968ம் தேதியிட்ட வள்ளிமுத்து அம்மாள் தனக்காகவும், தனது மைனர் மக்கள் சார்பாகவும் சீனிவாசனுக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ-1. 03.03.2015ம் தேதியிட்ட சீனிவாசன் பெயரிலான கிஸ்து இரசீது வா.சா.ஆ-2. 20.11.1995ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதிக்கு, சீனிவாசன் எழுதிக்கொடுத்த பொதுஅதிகார ஆவணம் - சான்றிட்ட நகல் - வா.சா.ஆ-3. 11.08.2015ம் தேதியிட்ட சீனிவாசன் இறப்புச் சான்றிதழ் - உண்மை நகல் வா.சா.ஆ-4. 08.02.2016 சீனிவாசன் வாரிசுச்

சான்றிதழ் - உண்மை நகல் வா.சா.ஆ-5. 02.11.2016ம் தேதியிட்ட வழக்கு சொத்துகுறித்த வில்லங்க சான்றிதழ்- கணினி நகல் வா.சா.ஆ-6. 02.07.2014ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி தனக்காகவும், பவர் ஏஜெண்ட் நிலையில், 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரம் சார்பதிவாளர் சான்றிட்ட நகல் வா.சா.ஆ-7. 23.01.2017ம் தேதியிட்ட வாதிகள், இராமநாதபுரம் மாவட்ட பதிவாளருக்கு கொடுத்த மனு கைநகல் வா.சா.ஆ-8. 23.01.2017ம் தேதியிட்ட மாவட்ட பதிவாளர் 3ம் வாதிக்கு அனுப்பிய கடிதம் அசல் வா.சா.ஆ-9. 20.09.2017ம் தேதியிட்ட 1,2 பிரதிவாதிகள் வழக்குச் சொத்தை 3ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் சான்றிட்ட நகல் - வா.சா.ஆ-10. 20.10.2017ம் தேதியிட்ட 3ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தானப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.11. 16.04.1975ம் தேதியிட்ட அடமானக் கடன் ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ-12. 29.03.1971ம் தேதியிட்ட அடமானக் கடன் ஆவணம் - சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ-13. 24.06.1970 ம் தேதியிட்ட அடமானக் கடன் ஆவணம் - சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ-14. 04.06.1970ம் தேதியிட்ட அடமானக் கடன் ஆவணம் - சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ-15. 10.05.2002ம் தேதியிட்ட திருச்சுழி கூட்டுறவு நிலவள வங்கியில் சீனிவாசன் பெற்ற கடனை திருப்பி செலுத்தக்கோரி அனுப்பப்பட்ட கடன் அசல் வா.சா.ஆ.16. 20.06.2002ம் தேதியிட்ட Q-129 கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் சீனிவாசன் பெற்ற கடனில் பகுதியை திருப்பி செலுத்தியதற்கான இரசீது - அசல் வா.சா.ஆ-17. Q-129 கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் சீனிவாசன் பெற்ற கடனை திருப்பி செலுத்தியதற்கான இரசீது - அசல் வா.சா.ஆ-18. ( வா.சா.ஆ-16 முதல் வா.சா.ஆ-18 வரையான ஆவணங்களில் முத்திரை எதுவும் போடப்படவில்லை. எனவே மேற்படி ஆவணங்கள் ஆட்சேபிக்கப்படுவதாக 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டு

மேற்படி ஆட்சேபனை குறித்து தீர்புரையின்போது தீர்மானிக்கப்படும் என்ற நிலையில் மேற்படி ஆவணங்கள்3,4 பிரதிவாதிகளின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) 14.09.2021ம் தேதியிட்ட திருச்சுழி கூட்டுறவு நிலவள வங்கியால் வழங்கப்பட்ட கடனில்லாச் சான்று அசல் - வா.சா.ஆ-19. 09.02.1968ம் தேதியிட்ட வள்ளிமுத்து அம்மாள் தனக்காகவும், தனது மைனர் மக்கள் சார்பாகவும் சீனிவாசனுக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் அசல் வா.சா.ஆ-20. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது,